ரணசிங்க ஜனசஹன மன்றம்'' என்னும் பெயர் மகுடத்தின்கீழ் இடையறாவழியுரிமை கொண்ட (இதனகத்துப்பின்னர் ''கூட்டுத் தாபனம்'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) கூட்டிணைக்கப்பட்ட குழுவாதலும் வேண்டும். அத்துடன் அப்பெயர் கொண்டு அது வழக்குத் தொடுக்கலாமென்பதுடன், அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம் என்பதுடனும், பொது இலச்சினை யொன்றை வைத்திருக்கவும், பயன்படுத்தவும் அதன்விருப்பப்படி அதனை மாற்றவும் முழுத்தத்துவமும், அதிகாரமும் கொண்டிருத்தல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்

**3.** கூட்டுத்தாபனம் அமைக்கப்படுவதற்கான பொதுக் குறிக் கோள்கள் பின்வருவனவாக இருத்தல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது :-

(அ) பௌத்த, கத்தோலிக்க, இந்து, இஸ்லாம் மதங்களைப் பிரபல்யப்படுத்தும் நோக்கத்தோடு நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்கு செய்தல் மற்றும் அவைகளை அபிவிருத்தி செய்வதற்காக உதவுதலும், அவ்வவ் மத ஸ்தாபனங்களின் பெரியோர்களை ஒன்றிணைத்து சங்கம் ஒன்றை உருவாக்கலும் அதன் மூலம் பயன்தரும் விடயங்கள் மற்றும் ஆரம்ப கால பாரம்பரியங்களை அறிமுகப்படுத்தல் ;

(ஆ) பாரம்பரிய மற்றும் ஏற்றுமதி விவசாயச் செயற்பாடு களில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்ற விவசாயிகளை ஊக்குவித்தலும் அவர்களுக்காக பல்வேறுபட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களைச் செய்தலும் ;

(இ) இயற்கை அனர்த்தங்கள், அழிவுகள் மற்றும் எதிர்பாராத நிகழ்வுகளின்போது நிவாரணம் மற்றும் நலனோம்புகை செயற்பாடுகளை மேற்கொள்ளல் ;

(ஈ) குறைந்த சிறப்புரிமையுள்ள இளைஞர்களுக்கும் யுவதிகளுக்கும் சுயதொழில் வாய்ப்புகளில் ஈடுபடுவதற்கு அல்லது வேறு வேலைவாய்ப்புக்கள் பெறுவதற்கான தொழிற் பயிற்சிகளை வழங்குவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளுதல் மற்றும் உதவியளித்தல்;

